

விவசாய விஞ்ஞானம்

# தாவரங்களின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவையான போசணைக் கூறுகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education





## தேர்ச்சி மட்டம் 4.1

# தாவர போசணைக் கூறுகள்

தாவர வளர்ச்சிக்குத் தேவையான மூலகங்கள் தாவர போசணைக் கூறுகள் ஆகும்.

**தாவர வளர்ச்சிக்கு தேவையான மூலகங்கள்**

- அத்தியாவசியமாவை{17}
  - மா மூலகங்கள்{9} (மாபோசணைக் கூறுகள்)
    - வளி, நீரிலிருந்து
      - ஒட்சிசன் (O)
      - காபன் (C)
      - ஐதரசன் (H)
    - மண்ணிலிருந்து
      - முதனிலைப் போசணைக் கூறுகள்
        - நைதரசன் (N)
        - பொசுபரசு (P)
        - பொட்டாசியம் (K)
      - துணைப் போசணைக் கூறுகள்
        - கல்சியம் (Ca)
        - மக்னீசியம் (Mg)
        - கந்தகம் (S)
  - நுண் மூலகங்கள்{8} (நுண்போசணைக் கூறுகள்)
    - மண்ணிலிருந்து
      - இரும்பு (Fe)
      - செம்பு (Cu)
      - நாகம் (Zn)
      - மங்கனிஸ் (Mn)
      - மொலிப்தளம் (Mo)
      - குளோரின் (Cl)
      - போரன் (B)
      - நிக்கல் (Ni)
- துணை அனுகூலமானவை / உதவு மூலகங்கள்
  - மண்ணிலிருந்து
    - சோடியம் (Na)
    - வனேடியம் (V)
    - சிலிக்கன் (Si)
    - அயடின் (I)
    - கோபாற்று (Co)


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk






**அசையும் போசணைக் கூறு (Mobile Nutrients)**

- உரிய இழையத்தினூடாக தாவரத்தின் முதிர்ந்த இழையத்திலிருந்து புதிதாக உருவாகும் இழையத்தை நோக்கி அசையும்.
- O, C, H, N, P, K, Mg, Cl
- குறைபாட்டு அறிகுறி முதிர்ந்த இழையங்களில் தோன்றும்.

**அசையாத போசணைக் கூறு (Immobile Nutrients)**

- உரிய இழையத்தினூடாக தாவரத்தின் முதிர்ந்த இழையத்திலிருந்து புதிதாக உருவாகும் இழையத்தை நோக்கி அசையாதவை.
- Ca, B, S, Fe, Mn, B, Zn, Cu, Mo, N
- குறைபாட்டு அறிகுறி இளம் இழையங்களில் தோன்றும்.

**அத்தியாவசிய மூலகம் பின்வரும் 3 தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

1) அத்தியாவசியமான மூலகமன்றி, சாதாரணமாகத் தாவரமொன்று வளர்ந்து அதன் வாழ்க்கை வட்டத்தைப் பூரணப்படுத்த இயலாதிருக்க வேண்டும்.
2) அத்தியாவசியமான மூலகங்களினால் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் வேறு மூலகங்களினால் ஆற்றப்பட முடியாதவையாக இருத்தல்.
3) தாவரத்தின் அனுசேபச் செயன்முறையுடன் நேரடியாக தொடர்புடையதாக இருத்தல்.

**துணை அனுகூலமான மூலகங்கள்**

தாவரத்துக்கு அவசியமில்லாத எனினும் அதன் இருப்புக்குத் துணையாகும் மூலகங்கள்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk